# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றம்

---

# 1998 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க, இலங்கைத் திருச்சபை (கூட்டிணைத்தல்) சட்டம்

---

(1998 ஓகத்து மாதம் 06 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.)

அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது.

---

1998, ஓகத்து மாதம் 06 ஆந் தேதிய **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் II ஆம் பகுதிக்குக்** குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

கொழும்பு 1. அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.

**விலை : ரூபா 9.00** **தபாற் செலவு : ரூபா 2.50**

## 1998 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க, இலங்கைத் திருச்சபை (கூட்டிணைத்தல்) சட்டம்

[1998 ஆம் ஆண்டு ஒகத்து மாதம் 06 ஆம் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது.]

ச.வ.—ஒ. 20/ 96

**இலங்கைத் திருச்சபையை நிருவகிப்பதற்கும் ஒழுங்கு படுத்துவதற்கும்; ஒவ்வொரு மறைமாவட்டப் பேராயரைக் கூட்டிணைப்பதற்கும்; இலங்கைத் திருச்சபையின் நம்பிக்கைப் பொறுப்பாளர்களைக் கூட்டிணைப்பதற்கும்; ஆங்கிலத் திருச்சபைக் கட்டளைச் சட்டத்தையும், ஆயராளுகைத் திருச்சபைகள் கட்டளைச் சட்டத்தையும், 1972 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க, இலங்கைத் திருச்சபைச் சட்டத்தையும் நீக்குவதற்கும் அவற்றுடன் தொடர்புபட்ட அல்லது அவற்றின் இடைநேர்விளைவான கருமங்களுக்கும் ஏற்பாடு செய்வதற்குமானதொரு சட்டம்.**

காலத்திற்குக்காலம் திருத்தப்பட்டவாறான 1885 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க, ஆங்கிலத் திருச்சபைக் கட்டளைச் சட்டத்தின் மூலம் ஆங்கிலத் திருச்சபையின் பேராயரும், திருப்பணியாளர்களும், பொதுநிலையினரும் தமது சமயஞ் சார் ஆதனத்தையும் அலுவல்களையும், தாம் பொருத்த மானதும், அவசியமானதும் என எண்ணுகின்றவாறு முகாமை செய்வதற்கான ஏற்பாடு செய்யப்பட்டதாதலாலும் : முன்னுரை.

1972 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க, இலங்கைத் திருச்சபைச் சட்டத்தின் மூலம் இலங்கைத் திருச்சபையை அமைப்பதற்கான ஏற்பாடு செய்யப்பட்டதுடன், இலங்கைத் திருச்சபையை இலங்கையிலுள்ள ஆங்கிலத் திருச்சபையுடன் (எத்தகையதுமான எப்பெயரிலும் அழைக்கப்படுவதாக) ஒருமுகப்படுத்துவதை நிறுவுவதற்கும், இரு பேராயரும், இரு மறைமாவட்டமும் கொண்டதாக இலங்கைத் திருச்சபைக்கு சட்ட வலிமை வழங்குவதற்கும், சொல்லப்பட்ட இலங்கைத் திருச்சபை அதன் சொந்த அலுவல்களை ஒழுங்குபடுத்துவதை இயலச் செய்வதற்கும் ஆக ஆங்கிலத் திருச்சபைக் கட்டளைச் சட்டத்திற்குக் குறித்த சில திருத்தங்கள் செய்யப்பட்டுள்ளன வாதலாலும் :

2 — டீ 041856 — 1,100 (96/10)

காலம் செல்லச்செல்ல, சொல்லப்பட்ட ஆங்கிலத் திருச் சபைக் கட்டளைச் சட்டத்தையும், ஆயராளுகைத் திருச்சபைகள் கட்டளைச் சட்டத்தையும், 1972 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க, இலங்கைத் திருச்சபைச் சட்டத்தையும் நீக்கி, அவற்றிற்குப் பதிலாக, இலங்கைத் திருச்சபை தனது சொந்த அலுவல்களை ஒழுங்குபடுத்துவதை இயலச் செய்யும் ஏனைய ஏற்பாடுகளைச் செய்வது உசிதமானதென உணரப்படுகின்றதாதலாலும் :

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளு மன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

சுருக்கப் பெயர்.

**1.** இச்சட்டம் 1998 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க, இலங்கைத் திருச்சபை (கூட்டிணைத்தல்) சட்டம் என எடுத்துக் காட்டப்படலாம்.

இலங்கைத் திருச்சபையின் அமைப்பு.

**2.** (1) இலங்கைத் திருச்சபை பின்வருவோரைக் கொண்டிருத்தல் வேண்டும் :—

(அ) கொழும்பு மறைமாவட்டமும், கொழும்பு பேராயரும் ;

(ஆ) குருநாகல் மறைமாவட்டமும், குருநாகல் பேராயரும் ;

(இ) இலங்கைத் திருச்சபை யாப்பின் ஏற்பாடுகளுக்கு இணங்க, இலங்கைத் திருச்சபை தொடர்பில் காலத்திற்குக்காலம் உருவாக்கப்படக்கூடியவாறான அத்தகைய வேறு மறைமாவட்டங்களும், அத்தகைய மறைமாவட்டங்களுக்கு நியமிக்கப்படும் பேராயர்களும்.

(2) இலங்கைத் திருச்சபை யாப்பின் ஏற்பாடுகளின்கீழ் புதிய மறைமாவட்டம் ஒன்று உருவாக்கப்படுகின்றவிடத்து, அத்தகைய மறைமாவட்டத்தின் ஆள்புல எல்லைகள், அத்தகைய மறைமாவட்டத்தை உள்ளடக்கும், இடப்பரப்பின் எல்லைகளையும், வரையறைகளையும் குறித்துக் காட்டுவதன் மூலம் வரைவுபடுத்தப்படுதல் வேண்டும் என்பதுடன், அத்தகைய புதிய மறைமாவட்டம் உருவாக்கப்பட்டு மூன்று பஞ்சாங்க மாத காலத்தினுள், கசெற்றிலும் அத்துடன் சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய ஒவ்வொரு மொழியிலுமுள்ள நாளாந்த புதினப்பத்திரிகை ஒன்றிலும் அந்த ஆள்புல எல்லைகள் வெளியிடப்படுதலும் வேண்டும்.

3. இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைய, இச்சட்டத்தின் கீழ் அமைக்கப்பட்ட இலங்கைத் திருச்சபை எல்லாக் கருமங்களுக்கும் நோக்கங்களுக்குமாக, 1972 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க, இலங்கைத் திருச்சபைச் சட்டத்தின்கீழ் அமைக்கப்பட்ட இலங்கைத் திருச்சபையின் தொடர்ச்சியெனவும், இலங்கையிலுள்ள ஆங்கிலத் திருச்சபையை ஒத்ததெனவும் கருதப்படுதல் வேண்டும். இவை சில சமயம் பின்வருமாறு அழைக்கப்படுதலும் அறியப்படுதலும் வேண்டும் :—

இலங்கைத் திருச்சபை இலங்கையிலுள்ள ஆங்கிலத் திருச்சபையின் தொடர்ச்சியெனவும் அதனுடன் ஒருமுகப்படுத்தப்பட்டதெனவும் கருதப்படுதல் முதலியன.

(அ) இங்கிலாந்து, அயர்லாந்து ஒருப்பட்ட திருச்சபை ;

(ஆ) இலங்கைத் தீவிலுள்ள ஆயராளுகைத் திருச்சபை ;

(இ) கொழும்பு மறைமாவட்டத்திலும், குருநாகல் மறைமாவட்டத்திலும் உள்ள ஆங்கிலத் திருச்சபை ; அல்லது

(ஈ) இந்திய, பர்மிய, இலங்கைத் திருச்சபையின் அல்லது இந்திய, பாகிஸ்தானிய, பர்மிய, இலங்கைத் திருச்சபையின் சமயஞ்சார் மாகாணத்தின் கொழும்பு மறைமாவட்டம் ; அல்லது

(உ) இந்திய, பர்மிய, இலங்கைத் திருச்சபையின் அல்லது இந்திய, பாகிஸ்தானிய, பர்மிய, இலங்கைத் திருச்சபையின் சமயஞ்சார் மாகாணத்தின் குருநாகல் மறைமாவட்டம் ;

அத்துடன் இலங்கைத் திருச்சபை என்னும் சொல்லமைப்பினாலும்.

(அ) முதல் (உ) வரையிலான பந்திகளில் தரப்பட்ட சொல்லமைப்புகளுள் எதனாலும் பெயர் குறிப்பிடப்படும் திருச்சபைக்குச் சொந்தமான எல்லா ஆதனங்களும் உரிமைகளும் சிறப்புரிமைகளும் அதன்மீது சுமத்தப்பட்டிருக்கின்ற எல்லாக் கடமைகளும் பொறுப்புக்களும் இச்சட்டத்தின்கீழ் அமைக்கப்படும் சொல்லப்பட்ட இலங்கைத் திருச்சபையைச் சென்றடைதல் வேண்டும் என்பதுடன், சட்டவாக்கங்கள், விதிகள், ஒழுங்குவிதிகள், உறுதிகள், ஒப்பந்தங்கள் யாவற்றிலும் அத்துடன் எத்தகையதுமான எப்பெயரிலும் விவரணத்திலும் அமைந்த வேறு ஆவணம் எதிலும் இதுவரை காலமும்

பயன்படுத்தப்பட்டு வந்தவையான (அ) முதல் (உ) வரையிலுமான பந்திகளில் தரப்பட்டுள்ள சொல்லமைப்புகளும் சொல்லப்பட்ட இலங்கைத் திருச்சபை, இலங்கையிலுள்ள ஆங்கிலத் திருச்சபை ஆகியன தொடர்பிலான ஏனைய எல்லாச் சொல்லமைப்புக்களும் இதன்மேல் இச்சட்டத்தின்கீழ் அமைக்கப்பட்ட இலங்கைத் திருச்சபையைக் குறிப்பீடு செய்வனவாகக் கருதப்படுதல் வேண்டும்.

பொது அவைகளை நடாத்துவதற்கான தத்துவம்.

**4.** (1) இலங்கைத் திருச்சபை பொது அவைகளை நடாத்துவதற்குத் தத்துவம் கொண்டதாதல் வேண்டும்.

(2) அத்தகைய பொது அவைகள் நடாத்தப்படும் முறையும் நேரங்களும் அவற்றால் பிரயோகிக்கப்படும் தத்துவங்களும் இலங்கைத் திருச்சபையின் யாப்பில் குறித்துரைக்கப்பட்டவாறாக இருத்தல் வேண்டும்.

மறைமாவட்டப் பேரவைகளை நடாத்துதல்.

**5.** இலங்கைத் திருச்சபையின் மறைமாவட்டம் ஒன்று, அம்மறைமாவட்டத்தின் யாப்பில் குறித்துரைக்கப்பட்டவாறான அத்தகைய முறையிலும் அத்தகைய நேரங்களிலும் அதன் சமயஞ்சார் அலுவல்களைப் பணித்து முகாமை செய்யும் நோக்கத்துக்காகவும் அவ்வாறு குறித்துரைக்கப்பட்ட அத்தகைய தத்துவங்களைப் பிரயோகிக்கும் நோக்கத்துக்காகவும் மறைமாவட்டப் பேரவைகளையும் மறைமாவட்டக் குருமார் கூட்டத்தையும், மறைமாவட்ட அவைகளையும் நடாத்தத் தத்துவம் கொண்டதாதல் வேண்டும்.

ஒரு மறைமாவட்டப் பேராயர் ஒரு கூட்டிணைக்கப்பட்ட குழுவாக இருத்தல் வேண்டும்.

**6.** (1) ஒரு மறைமாவட்டத்தில், பேராயர் ஒவ்வொருவரும் கூட்டிணைக்கப்பட்டவொரு குழுவாக இருத்தல் வேண்டும் ; அத்துடன் அம்மறைமாவட்டப் பேராயரின் பெயரில் இடையறா வழியுரிமைகொண்டவராக இருத்தல் வேண்டும். அத்துடன், ஒவ்வொரு விவரணத்தினதுமான அசைவுள்ள, அசைவற்ற ஆதனத்தைக் கொள்ள, கொள்வனவு செய்ய, ஏற்றுக்கொள்ள, எடுக்க அல்லது வைத்திருக்க, குத்தகையிலே எடுக்க (துய்க்க), முழுத் தத்துவமும் அதிகாரமும் கொண்டவராதலும் வேண்டும். அத்துடன் இலங்கைத் திருச்சபை யாப்பில் அதற்கெனக் காலத்திற்குக்காலம் ஆக்கப்படக்கூடிய அத்தகைய ஏற்பாடுகளுக்கு அமைவாக அவ்வாதனங்களை விற்க, ஈடுவைக்க, வாடகைக்குக் கொடுக்க, குத்தகைக்குக் கொடுக்க, கொடுத்து மாற்ற அல்லது எத்தகையதுமான எம்முறையிலும் அவற்றை வேறுவகையில் கையுதிர்க்க அல்லது கையாள முழுத்தத்துவமும் அதிகாரமும் கொண்டவராதலும் வேண்டும். அத்துடன் அவர் கூட்டிணைப்புப் பெயரில் வழக்குத் தொடரலாம் அல்லது அவருக்கு எதிராக வழக்குத் தொடரப்படலாம்.

(2) ஒரு மறைமாவட்டத்தின் எவரேனும் பேராயருக்கும் அவரது வழியுரிமையாளர்களுக்கும், (அவ்வழியுரிமையாளர்கள் பெரிய பிரித்தானிய, வட அயர்லாந்து ஐக்கிய இராச்சியத்தில் பாரிய இலச்சினையின்கீழான அரசுரிமைப் பத்திரங்களின் மூலம் நியமிக்கப்பட்டிருப்பினுஞ்சரி அல்லது வேறு ஏதேனும் சட்டவாக்கத்தின் ஏற்பாடுகளின்கீழோ அல்லது இந்திய, பாகிஸ்தானிய, பர்மிய, இலங்கைத் திருச்சபையின் யாப்பு கட்டளை விதிகள், விதிகள் ஆகியவற்றின் கீழோ அனுமதிக் கப்பட்டிருப்பினும் சரி) ஏதேனும் உறுதியின் அல்லது சாதனத்தின் பயனாகவோ அல்லது வேறு வகையாகவோ உரித்தாக்கப்பட்ட அல்லது தற்போது உரித்தாக்கப்படுகின்ற அல்லது இதன் பின்னர் உரித்தாக்கப்படும் அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனம் யாவும், அவற்றைச் சார்ந்த எவையேனும் நம்பிக்கைக்கும் பொறுப்புக்களுக்கும் நிபந்தனை களுக்கும் அமைவாக அப்போதுள்ள அத்தகைய மறைமாவட் டத்தின் பேராயரையும் அத்தகைய பேராயர் என்ற வகையில் அவரது வழியுரிமையாளர்களையும் சென்றடைதல் வேண்டும் என்பதுடன், அவர்களுக்கு உரித்தாக்கப்படுதலும் வேண்டும்.

கூட்டிணைக்கப் பட்ட நம்பிக்கைப் பொறுப்பாளர்கள்.

7. (1) "இலங்கைத் திருச்சபையின் கூட்டிணைக்கப்பட்ட நம்பிக்கைப் பொறுப்பாளர்கள்" என்ற பெயர் மகுடத்தின்கீழ், இலங்கைத் திருச்சபை யாப்பின் ஏற்பாடுகளுக்கு இணங்க அத்திருச்சபை தொடர்பில் இலங்கைத் திருச்சபையின் மறைமாவட்டப் பேரவையினால் நியமிக்கப்படக்கூடியவாறான அத்தகைய எண்ணிக்கையான உறுப்பினர்களைக் கொண்ட மைந்த கூட்டுத்தாபனம் ஒன்று தாபிக்கப்படுதல் வேண்டும் என்பதுடன், இது இடையறாவழியுரிமையும் பொது இலச்சினை யொன்றும் கொண்டதாதல் வேண்டும். அத்துடன் அக்கூட்டி ணைப்புப் பெயரில் வழக்குத் தொடுக்கலாம் என்பதுடன் அதற்கெதிராக வழக்குத் தொடுக்கவும்படலாம்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் தாபிக்கப்படும் கூட்டுத்தாபனம், ஏதேனும் அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனத்தைக் கொள்ள, கொள்வனவு செய்ய, ஏற்றுக்கொள்ள, எடுக்க, வைத்திருக்க, குத்தகைக்கு எடுக்க அல்லது துய்க்கவும் அத்துடன் அதனை விற்க, ஈடுவைக்க, பராதீனப்படுத்த, வாடகைக்கு விட, குத்தகைக்கு விட, கொடுத்து மாற்ற அல்லது அத்தகையதுமான எம்முறையிலும் வேறுவகையில் கையுதிர்க்க அல்லது கையாளவும் தத்துவமும் அதிகாரமும் கொண்டதாதல் வேண்டும் ; அத்துடன் இலங்கைத் திருச்சபையின் ஏதேனும் நிதியத்துக்கான நம்பிக்கைப் பொறுப்பாளர்களாகச் செயலாற்று தவற்கும் அதன் சார்பில் பணம் கடன் பெறுவதற்கும் திரட்டு வதற்கும் தகுதிவாய்ந்ததாதல் வேண்டும்.

இலங்கைத் திருச்சபையின் யாப்பு பிணிக்கும் பயனுடையதாதல்.

8. இலங்கைத் திருச்சபை யாப்பின் ஏற்பாடுகள் மறை மாவட்டம் யாவற்றையும் பிணிப்பதாதல் வேண்டும் என்பதுடன், இலங்கைத் திருச்சபையின் யாப்பின் ஏற்பாடுகளுக்கும், இலங்கைத் திருச்சபையின் ஏதேனும் மறைமாவட்ட யாப்பின் ஏற்பாடுகளுக்குமிடையில் ஒவ்வாமை எதுவும் காணப்படும் சந்தர்ப்பத்தில் இலங்கைத் திருச்சபை யாப்பின் ஏற்பாடுகள் மேலோங்கி நிற்றல் வேண்டும்.

ஒரு ஆள்புல எல்லைகளை வேறுபடுத்தல்.

9. (1) கொழும்பு மறைமாவட்டத்தினதும், குருநாகல் மறைமாவட்டத்தினதும் ஆள்புல எல்லைகள் இச்சட்டம் தொடங்கும் திகதியன்றுள்ளவாறு இந்த இரு ஏலவேயுள்ள ஆள்புல எல்லைகளாக இருத்தல் வேண்டும்.

(2) கொழும்பு மறைமாவட்டத்தினதும், குருநாகல் மறைமாவட்டத்தினதும் ஆள்புல எல்லைகள் இலங்கைத் திருச்சபை யாப்பில் தரப்பட்டுள்ள முறையில் வேறுபடுத்தப் படலாம் அல்லது மாற்றப்படலாம். அத்தகைய மேற்றிராசனத்தின் புதிய ஆட்புல எல்லைகள் மேற்றிராசனத்தில் அடங்கியுள்ள இடப்பரப்பின் எல்லைகளையும் வரையறைகளையும் குறிப்பிடுவதன் மூலம் வரைவுபடுத்தப்படுதல் வேண்டும் என்பதுடன், ஆள்புல எல்லைகள் அவ்வாறு வேறுபடுத்தப்பட்டு அல்லது மாற்றப்பட்டு மூன்று பஞ்சாங்க மாத காலத்தினுள் கசெற்றிலும் அத்துடன் சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய ஒவ்வொரு மொழியிலுமுள்ள நாளாந்த புதினப்பத்திரிகை ஒன்றிலும் வெளியிடப்படுதலும் வேண்டும்.

மாகாணத்தின் யாப்பும் கட்டளை விதிகளும் ஏற்புடையனவாதல்.

10. இலங்கைத் திருச்சபை யாப்பு ஏற்றங்கீகரிக்கப்படுகின்ற வகையில் இந்திய, பாகிஸ்தானிய, பர்மிய, இலங்கை மாகாணத்தின் யாப்பு, கட்டளை, விதிகள் ஆகியவற்றினால் இலங்கைத் திருச்சபை பிணிக்கப்பட்டதாகத் தொடர்ந்து வருதல் வேண்டும்.

முதலாவது பொது அவையை நடாத்துதல்.

11. இலங்கைத் திருச்சபையின் (இதனகத்துப் பின்னர் "அனைத்துறுப்பினர் அவை" எனக் குறிப்பீடு செய்யப்படும்) முதலாவது பொது அவையை நடாத்துவதற்கான நேரத்தையும் இடத்தையும் நிர்ணயிப்பதும் அத்தகைய அவையைக் கூட்டுவதும் கொழும்பு பேராயருக்கும் குருநாகல் பேராயருக்கும் சட்டமுறையானதாதல் வேண்டும்.

அனைத்துறுப்பினர் அவை.

**12.** (1) அனைத்துறுப்பினர் அவை பின்வருவோரைக் கொண்டிருத்தல் வேண்டும் :–

(அ) கொழும்புப் பேராயர் ;

(ஆ) குருநாகல் பேராயர் ;

(இ) கொழும்பு மறைமாவட்டத்தின் பேரவையினால் அத்தகைய நோக்கத்துக்கென தேர்ந்தெடுக்கப்படுபவர்களும் கொழும்பு மறைமாவட்டத்தின் பிரதிநிதிகளாகவுமுள்ளவர்களுமான ஐந்து திருப்பணியாளரும், ஐந்து பொதுநிலையினரும் ;

(ஈ) குருநாகல் மறைமாவட்டத்தின் மறைமாவட்டப் பேரவையினால் அத்தகைய நோக்கத்துக்கெனத் தேர்ந்தெடுக்கப்படுபவர்களும் குருநாகல் மறைமாவட்டத்தின் பிரதிநிதிகளாகவுள்ளவர்களுமான ஐந்து திருப்பணியாளர்கள், ஐந்து பொதுநிலையினர் ;

(உ) இலங்கைத் திருச்சபையின் திருப்பணியாளர், பொதுநிலையினர் ஆகியோரிடையேயிருந்து கொழும்பு பேராயரினாலும் குருநாகல் பேராயரினாலும் கூட்டாக உறுப்பினர்களாகப் பெயர் குறித்து நியமிக்கப்படும் பத்து ஆட்கள்.

(2) இரு பேராயருள் திருநிலைப்படுத்தல் மூலம் அதிசிரேட்டராகவுள்ளவர் அனைத்துறுப்பினர் அவையின் அவைத் தலைவராக இருத்தல் வேண்டும் என்பதுடன் மற்றப் பேராயர் அதன் அவைத் துணைத் தலைவராக இருத்தலும் வேண்டும்.

(3) அவைத் தலைவர், அவையின் எல்லாக் கூட்டங்களுக்கும் தலைமை தாங்குதல் வேண்டும் என்பதுடன், அவைத் தலைவர் வருகை தராவிடில், துணைத்தவிசாளர் அத்தகைய கூட்டத்திற்குத் தலைமை தாங்குதல் வேண்டும்.

(4) அனைத்துறுப்பினர் அவையின் ஏதேனும் கூட்டத்தின் போது முடிபுக்கு எடுக்கப்படும் எல்லாப் பிரச்சினைகளும் அவையில் தேர்ந்தெடுக்கப்பட்டு பெயர் நியமிக்கப்பட்ட திருப்பணியாளருள் பெரும்பான்மையினரின் வாக்கினாலும் அத்துடன் அவையின் தேர்ந்தெடுக்கப்பட்ட பெயர் நியமிக்கப் பட்ட பொதுநிலையினருள் பெரும்பான்மையினரின் வாக்கினாலும் அத்துடன் கொழும்பு பேராயரினதும் குருநாகல் பேராயரினதும் சம்மதத்துடனும் முடிபு செய்யப்படுதல் வேண்டும்.

அனைத்துறுப்பினர் அவையின் கடமை.

13. (1) அனைத்துறுப்பினர் அவை இலங்கைத் திருச்சபை யாப்பை வரைதலும் ஏற்றங்கீகரித்தலும் வேண்டும். இது அதன் நெறிகளையும் உள்ளடக்கும் கட்டளைவிதிகளையும், வெளிப்படுத்தும் விதிகளையும் வெளிப்படுத்தல்களைக் கொண்டிருத்தல் வேண்டும். இவை இலங்கைத் திருச்சபையின் சமயஞ்சார் வழக்காறுகளை ஒழுங்குபடுத்துவதற்கும் அதன் பொதுநிருவாகம் சம்பந்தமான கருமங்களுக்கும் ஏற்பாடு செய்யும்.

-(2) அனைத்துறுப்பினர் அவை (1) ஆம் உட்பிரிவின்கீழ் அதன் கடமையை நிறைவேற்றும் நோக்கத்துக்கு அவசியமாகக் கூடிய அந்தளவு அமர்வுகளை நடாத்துதல் வேண்டும் என்பதுடன், இலங்கைத் திருச்சபை யாப்பு ஏற்றங்கீகரிக்கப் பட்டதிலிருந்தும் அதன் பின்னரும் அனைத்துறுப்பினர் அவையொன்றாகப் பணியாற்றாதொழிதலும் வேண்டும்.

(3) இலங்கைத் திருச்சபை யாப்பு ஏற்றங்கீகரிக்கப்பட்டதும் அது சொல்லப்பட்ட யாப்பில் ஏற்பாடு செய்யப்படக்கூடிய வாறான அத்தகைய முறையில் திருத்தப்படலாம், நீக்கப் படலாம் அல்லது மாற்றீடு செய்யப்படலாம்.

பொருள்கோடல்.

14. இச்சட்டத்தில் சந்தர்ப்பம் வேறுவகையாகத் தேவைப் படுத்தினாலொழிய, "இலங்கைத் திருச்சபை யாப்பு" என்பது இச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின்கீழ் அனைத்துறுப்பினர் அவையினால் ஏற்றங்கீகரிக்கப்படும் யாப்பு எனப் பொருள் படும்.

நீக்கமும் பேணலும்.

15. (1) ஆங்கிலத் திருச்சபைக் கட்டளைச் சட்டம் (அத்தியாயம் 334), ஆயராளுகைத் திருச்சபைகள் கட்டளைச் சட்டம் (அத்தியாயம் 335), 1972 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க, இலங்கைத் திருச்சபையின் சட்டம் ஆகியன இத்தால் நீக்கப் படுகின்றன.

(2) ஓராம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட சட்டவாக்கங்கள் நீக்கப்பட்டிருப்பினும் கூட —

(அ) ஆங்கிலத் திருச்சபைக் கட்டளைச் சட்டத்தின் 9ஆம் பிரிவின்கீழ் தாபிக்கப்பட்ட இலங்கையிலுள்ள ஆங்கிலத் திருச்சபையின் கூட்டிணைக்கப்பட்ட நம்பிக்கைப் பொறுப்பாளர்கள் என அழைக்கப்படுவதும் அறியப்படுவதுமான கூட்டுத்தாபனம், இச்சட்டத்தின் 7 ஆம் பிரிவின்கீழ் தாபிக்கப்படும் இலங்கைத் திருச்சபையின் கூட்டிணைக்கப்பட்ட நம்பிக்கைப் பொறுப்பாளர்கள் என அழைக்கப்படுவதும் அறியப்படுவதுமான கூட்டுத்தாபனம் அமைக்கப்படுகின்ற வரையில் தொடர்ந்து பணியாற்றுதல் வேண்டும் என்பதுடன், அதன் யாப்பு தொடர்பில் கூட்டிணைக்கப்பட்ட நம்பிக்கைப் பொறுப்பாளர்கள் தொடர்பிலான கொழும்பு மேற்றிராசன யாப்பினது X ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகள் ஏற்புடையனவாதலும் வேண்டும் ;

(ஆ) எத்தகையதுமான எம்முறையிலும் கொள்ளப்பட்டனவும், உரித்தாக்கப்பட்டனவும், இச்சட்டம் தொடங்கும் திகதிக்கு நேர்முந்திய நாளன்று முறையே கொழும்பு பேராயர், குருநாகல் பேராயர் ஆகியோரின் உடைமையில் இருப்பனவுமான அசைவுள்ள, அசைவற்ற ஆதனங்கள் முறையே கொழும்பு பேராயர், குருநாகல் பேராயர் ஆகியோரின் ஆதனமாகத் தொடர்ந்திருத்தல் வேண்டும் ;

(இ) எவ்வகையிலும் கொள்ளப்பட்டு உரித்தாக்கப்பட்டவையும் இலங்கையிலுள்ள ஆங்கிலத் திருச்சபையின் கூட்டிணைக்கப்பட்ட நம்பிக்கைப் பொறுப்பாளர்களின் உடைமையில் உள்ளவையுமான அசைவுள்ள, அசைவற்ற ஆதனங்கள், இலங்கைத் திருச்சபையின் கூட்டிணைக்கப்பட்ட நம்பிக்கைப் பொறுப்பாளர்களை அமைக்கப்பட்ட திகதியிலிருந்து இச்சட்டத்தின் 7 ஆம் பிரிவின்கீழ் தாபிக்கப்பட்ட இலங்கைத் திருச்சபையின் கூட்டிணைக்கப்பட்ட நம்பிக்கைப் பொறுப்பாளர்களின் ஆதனமாகக் கருதப்படுதல் வேண்டும் ;

(ஈ) நீக்கப்பட்ட ஏதேனும் சட்டவாக்கத்தின் அல்லது எல்லாச் சட்டவாக்கங்களின் கீழும் ஆக்கப்பட்டவையும் இச்சட்டம் தொடங்கும் திகதிக்கு நேர்முற்போந்த நாளன்று நடைமுறையில் இருப்பவையும் ஆன விதிகளும் ஒழுங்குவிதிகளும் அவை இச்சட்டத்தின் எவையேனும் ஏற்பாடுகளுடன் அல்லது அதன்கீழ் ஆக்கப்படும் விதியுடன் ஒவ்வாதனவாக இராத அளவு செல்லுபடியானவையாகத் தொடர்ந்திருத்தல் வேண்டும்.

(3) இச்சட்டம் தொடங்கும் திகதிக்கு நேர்முற்போந்த நாளன்று வலுவிலிருக்கும் கொழும்பு மறைமாவட்ட யாப்பும் குருநாகல் மறைமாவட்ட யாப்பும் முறையே கொழும்பு மறைமாவட்ட யாப்பும், குருநாகல் மறைமாவட்ட யாப்பும் ஆகத் தொடர்ந்திருத்தல் வேண்டும் என்பதுடன், சொல்லப்பட்ட யாப்பின்கீழ் சொல்லப்பட்ட எல்லாச் செயல்களும் உரிய முறையில் எடுக்கப்பட்ட எல்லா முடிவுகளும் தொடர்ந்து வலுவிலிருந்து வருதலும் வேண்டும். அத்தகைய யாப்புகள் அந்நோக்கத்துக்கென அந்தந்த யாப்புகளில் ஏற்பாடு செய்யப்படும் முறையிலும், எவ்வாறாயினும் ஒரு மறைமாவட்ட யாப்பைத் திருத்துவது தொடர்பில் இலங்கைத் திருச்சபை யாப்பில் அடங்கியிருக்கக்கூடிய எவையேனும் ஏற்பாடுகளுக்கு அமையவும் திருத்தப்படலாம்.

குடியரசினதும் மறுபேரினதும் உரிமைகளைப் பேணுதல்.

**16.** இச்சட்டத்தில் அடங்கியுள்ளது எதுவும் குடியரசின் உரிமைகளையேனும் அல்லது ஏதேனும் அரசியல் அல்லது கூட்டிணைக்கப்பட்ட குழுவினது உரிமைகளையேனும் அல்லது இச்சட்டத்திற் குறிப்பிடப்பட்டவர்களும், அவர்கள்மூலம் அவர்களிலிருந்து அல்லது அவர்களின்கீழ் உரிமை கோருபவர்களும் தவிர்ந்த வேறு எவரேனும் ஆட்களின் உரிமைகளையேனும் பங்கப்படுத்தலாகாது அல்லது பாதிப்பதாதலாகாது.

ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.

**17.** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387: (வெளிநாடு) ரூபா 1,849 ; ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்குமுன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், இல.32, திரான்ஸ்வேர்க்ஸ் இல்லம், லோட்டஸ்ரோட், கொழும்பு 01 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்.